



கடலூரில் பல்வேறு விழாக்களில் பங்கேற்ற கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு கடலூர் கிழக்கு மாவட்டச் செயலாளர் – வேளாண் துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர் செல்வம் நினைவுப் பரிசு வழங்கினார்.




கோவை வடக்கு மாவட்ட இளைஞர் அணி சார்பில் தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் ஆலோசனையின் படி தமிழ்நாடு துணை முதலமைச்சர், கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின்வழிகாட்டுதலின்படிமாவட்ட இளைஞர்அணிதுணைஅமைப்பாளர்விக்கி(எ)பா.விக்னேஷ்குமார்ஒருங்கிணைப்பில் உதயநிதி ஸ்டாலின் அகடாமியை கழக துணை பொதுச் செயலாளர், நீலகிரி பாராளுமன்ற உறுப்பினர், முன்னாள் ஒன்றிய அமைச்சர் ஆ.இராசா திறந்து வைத்தார். இதில் கழக இளைஞர் அணி துணை செயலாளர், ஈரோடு பாராளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ்,திருப்பூர்வடக்குமாவட்டப்பொறுப்பாளர்,மாநகராட்சிமேயர்ந.தினேஷ்குமார்,கோவைவடக்குமாவட்டச்செயலாளர் தொண்டாமுத்தூர் அ.ரவி, அன்னூர் பேரூர் செயலாளர், பேரூராட்சி தலைவர் ஆர்.பரமேஸ்வரன், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் எம்.ஏ.ஆர்.கே.ஹக்கீம் உள்பட ஒன்றிய செயலாளர்கள், ஒன்றிய, பேரூர், கிளை கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

### இதுவரை விமர்ச்சித்தது இல்லை என்பதுதான் உண்மை!

# பா.ஜ.க.வை மறைமுகமாக ஆதரித்து வரும் எடப்பாடி பழனிச்சாமி!

## அமைச்சர் எஸ். ரகுபதி பேட்டி!

புதுக்கோட்டை, பிப்.24-

புதுக்கோட்டையில் சட்டத்துறை அமைச்சர் எஸ். ரகுபதி செய்தியாளர்களை சந்தித்தார்.

அப்போது, திருமயம் சட்டமன்ற தொகுதியில் சட்டம் ஒழுங்கு மிகவும் பாதுகாக்கப்படுகிறது என்பதற்கு அரிமளம் அருகே உள்ள பள்ளியில் பாலியல் குற்றம் சாட்டு மாணவர்கள் கூறிய உடனே உடனடியாக நடவடிக்கை எடுத்து சம்பந்தப்பட்ட ஆசிரியர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதை விட விரைந்து அரசு செயல்பட முடியாது. தைரியம் இருந்த காரணத்தினால் தான் மாணவிகள் தைரியமாக புகார் கொடுக்க முன்வந்திருக்கிறார்கள். இந்த அரசு பெண்களுக்கு தைரியத்தையும் பாதுகாப்பையும் வழங்கி உள்ளது.

இதை ஒரு கூட்டம் உத்தரபிரதேசம் போன்ற மாநிலத்தில் நடைபெற்ற பெண்கள் புகார் கொடுக்கவே வந்திருக்க மாட்டார்கள்.

பழிவாங்கும் நோக்கத்திற்கு அரசு துணை நிற்காது குறைந்தபட்சம் உண்மை இருந்தால் தான் நடவடிக்கையை அரசு மேற்கொள்ளும்.

பள்ளி கல்லூரிகளில் படிக்கும் மாணவிகளுக்கு உண்மையான பாதுகாப்பு தற்போது தான் கிடைத்துள்ளது. முன்பெல்லாம் புகார் கொடுக்க மாணவிகள் முன் வர மாட்டார்கள். புகார் கொடுத்தால் மதிப்பினை ஆசிரியர்கள் குறைத்து விடுவார் என்று. ஆனால் தற்போது



மாணவிகளுக்கு உள்ள அச்ச உணர்வை போக்கும் நிலையை அரசு உருவாக்கியுள்ளது. இதை அண்ணாமலையாலும் எடப்பாடி பழனிச்சாமி ஆளும் பொறுத்துக் கொள்ள முடியாதது தான்.

அண்ணாமலை இங்கே அறிவுரை கூறுபவர் மகாராஷ்டிராவில் உத்தர பிரதேசத்தில் கூற வேண்டும்.

அ.தி.மு.க. ஆட்சியில் பாதுகாப்பு வழங்கவில்லை. பொள்ளாச்சியில் நடந்த குற்றத்திற்கு கூட 20 நாள் கழித்து தான் வழக்கு பதிவு செய்தார்கள். அதனால் அதிமுக ஆட்சியில் புகார் கொடுக்க கூட யாரும் முன்வரவில்லை .

அண்ணாமலைக்கு ஒருமை பன்மை எதுவும் கிடையாது. ஐபிஎஸ் எப்படி படித்தார் என்பது அவருக்குத்தான் தெரியும்.

ஜப்பான், சீனா உள்ளிட்ட நாடுகளில் ஒரு மொழி கொள்கை வைத்துக் கொண்டு முன்னேறி வருகிறார்கள். நாம் இருமொழி கொள்கையை வைத்துக் கொண்டு ஏன் நம்மால் முன்னேற முடியாது. மோடியே வெளிநாட்டிற்கு சென்றால் ஹிந்தியிலா பேசுகிறார் ஆங்கிலத்தில் தான் பேசுகிறார்.

பாஜகவோடு மறைமுக கூட்டணி வைத்து உள்ளவர்தான் எடப்பாடி பழனிச்சாமி.

பாஜக ஆட்சியை அவர் மறைமுகமாக ஆதரித்து அவர்களது உதவியை நாடி வருகிறார்.

இதுவரை பாஜக ஆட்சி குறித்து எடப்பாடி பழனிச்சாமி விமர்சித்தது இல்லை என்பதுதான் உண்மை.

ஜெயக்குமார் போன்றவர்களை வைத்து கருத்துக்களை மட்டும் கூறி வருகிறார்.

நிச்சயமாக எந்த காலத்திலும் திமுகவின் ஆட்சியை அசைக்க முடியாது என்பதை 2026ல் மாற்றம் வரவில்லை என்றால் எப்போதும் வராது என்று கூறி அண்ணாமலை மறைமுகமாக ஒத்துக் கொண்டுள்ளார்.

1967இல் கூட்டணியை அறிமுகப்படுத்திய கட்சி திமுக. கூட்டணி என்பது பலம். ஒரே கொள்கையை கொண்டவர்கள் தான் கூட்டணி உள்ளவர்கள். இருமொழி கொள்கை அனைவருக்கும் ஒன்றுதான் ஒன்று தான். அனைத்து கொள்கைகளிலும் ஒத்த கொள்கையோடு தான் பயணித்து வருகிறோம். எங்கள் கூட்டணியை சிதைக்க பார்த்தாலும் சிதைக்க முடியாது என்ற காரணத்தினால் தான் கூட்டணி பலத்தோடு வெற்றி அடைகிறோம் என்று கூறுகிறார்கள். கூட்டணி பலம் எங்களுக்கு இருக்கிறது இல்லை என்று சொல்லவில்லை. ஆனால் அந்த கூட்டணி பாஜகவுக்கு கிடைக்கவில்லை அந்த ஆதங்கம் தான் என்று பேட்டி அளித்தார்.

### வீ. ஜெகதீசன் தலைமை! எம்.பிரபாகரன் எம்.எல்.ஏ. முன்னிலை

# பெரம்பலூர் மாவட்டக் கழகச் செயற்குழுக் கூட்டம்!

## அமைச்சர் சா.சி.சிவசங்கர் சிறப்புரையாற்றினார்!

பெரம்பலூர்,பிப்.24-

பெரம்பலூர் மாவட்ட செயற்குழு கூட்டம், பாலக்கரையில் உள்ள மாவட்ட கழக அலுவலகத்தில் மாவட்ட கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன் தலைமையில்,சட்டமன்ற உறுப்பினர் எம்.பிரபாகரன் முன்னிலையில் நடைபெற்றது.

இதில் போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.

இந்த கூட்டத்தில், பெரம்பலூர் சட்டமன்ற தொகுதி பார்வையாளர் தங்க.சித்தார்த், குன்னம் சட்டமன்ற தொகுதி பார்வையாளர் ஏ.கே.அருண்,

மாநில ஆதிதிராவிடர் நலக்குழு துணைச் செயலாளர் பா.துரைசாமி, மாநில வர்த்தக அணி துணைச் செயலாளர் குன்னம் சி.இராஜேந்திரன்,

மாநில பொறியாளர் அணி துணைச் செயலாளர் இரா.ப.பரமேஷ்குமார்,

தலைமை செயற்குழு உறுப்பினர் வழக்கறிஞர் என்.ராஜேந்திரன்,

பொதுக்குழு உறுப்பினர்கள் எஸ்.அண்ணாதுரை, பட்டுச்செல்வி ராஜேந்திரன், ஆர்.முருகேசன், அழகு.நீலமேகம்,

மாவட்ட அவைத்தலைவர் அ.நடராஜன்,

மாவட்ட துணைச் செயலாளர்கள் தழுதாழை பாஸ்கர், நூருல்ஹிதா இஸ்மாயில்,சன்.சம்பத்,

மாவட்ட பொருளாளர் செ.ரவிச்சந்திரன்,

ஒன்றிய கழகச் செயலாளர்கள் என்.கிருஷ்ணமூர்த்தி, எம்.ராஜ்குமார், எஸ்.நல்லதம்பி,

தி.மதியழகன், சி.ராஜேந்திரன், ஒன்றிய கழக பொறுப்பாளர் டாக்டர் செ.வல்லபன், நீ.ஜெகதீஷ்வரன், பேரூர் கழகச் செயலாளர்கள் எம்.வெங்கடேசன், ஆர்.ரவிச்சந்திரன், செல்வலெட்சுமிசேகர், ஏ.எம்.ஜாகிர்உசேன்,

மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் து.ஆதவன் (எ) ஹரிபாஸ்கர், துணை அமைப்பாளர்கள் டி.ஆர்.சிவசங்கர், அ.அப்துல்கரீம், வ.சுப்ரமணியன், மா.பிரபாகரன், ஆர். அருண், மாவட்ட இளைஞர் அணி முன்னாள் அமைப்பாளர் கே.ஜி.மாரிக்கண்ணன்,மாவட்ட இலக்கிய அணி செயலாளர் கவிஞர்.முத்தரசன், மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் மகாதேவி ஜெயபால், மாவட்ட அயலக அணி அமைப்பாளர் எ.ரசூல்அகமது, மாவட்ட விவசாய கூலித் தொழிலாளர் அணி அமைப்பாளர் ஏ.எம்.கே.கரிகாலன்,

மாவட்ட தொண்டர் அணி அமைப்பாளர் க.ரமேஷ், மாவட்ட வர்த்தக அணி அமைப்பாளர் வெ.ரமேஷ், முன்னாள் பெருந்தலைவர்கள் பிரபா செல்லப்பிள்ளை,

க.ராமலிங்கம், மாவட்ட மருத்துவ அணி அமைப்பாளர் டாக்டர் அ.கருணாநிதி,

மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் தங்க.கமல், மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் தி.இராசா, மாவட்ட கலை இலக்கிய பேரவை அமைப்பாளர் கே.எம்.ஏ.சுந்தர்ராஜ், மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளர் ஆர்.வேணுகோபால்,

மாவட்ட மீனவர் அணி துணை அமைப்பாளர் கோபாலபுரம் செல்வராஜ், தலைமை கழக பேச்சாளர் மு.விஜயரத்தினம்,

பாளை.மணிவண்ணன், முன்னாள் மாவட்ட கவுன்சிலர் எஸ்.செல்வகுமார், மாவட்ட வர்த்தக அணி துணை அமைப்பாளர் எம்.ரெங்கராஜ், மாவட்ட ஆதி திராவிடர் நலக்குழு துணை அமைப்பாளர் தம்பை.தர்மராஜ்,

மாவட்ட பிரதிநிதி எஸ்.அழகுவேல்,ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர் ரா.சிவா மற்றும் வனிதா சுப்ரமணியன் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

மார்ச் 01, கழகத் தலைவர் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் விழாவை முன்னிட்டு பெரம்பலூர் மாவட்டம் முழுவதும் கழகக் கொடியேற்றி,ஏழை, எளியோருக்கு நலத்திட்ட உதவிகள் வழங்குவது எனவும், மும்மொழி கொள்கையை திணிக்கும் மத்திய அரசைக் கண்டித்தும் தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டது.

### தமிழ்நாடு முதல்வர் காணொலி வாயிலாக திறந்துவைத்த

# திருவாரூர் அடியக்கமங்கலம் அரசுப்பள்ளிக்கு கூடுதல் வகுப்பறைகள்!

## பூண்டி கே.கலைவாணன் கழகத்தினர் - பங்கேற்பு!

திருவாரூர்,பிப்.24-

திருவாரூர் அருகே உள்ள அடியக்கமங்கலம் மற்றும் புதூர் அரசுமேல்நிலைப் பள்ளிக்கு மாணவ மாணவிகளின் கல்வியை மேம்படுத்தும் வகையில் புதிய வகுப்பறைகளை அமைத்துத் தந்து, அதனை காணொளி வாயிலாக தமிழ்நாடு முதல்வர் திராவிட நாயகர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்துவைத்தார். பின்னர் அந்த வகுப்பறையில் சட்டமன்ற உறுப்பினர் பூண்டி. கே.கலைவாணன் பள்ளி மாணவ மாணவிகளுடன் குத்துவிளக்கேற்றினார்.

தமிழ்நாட்டின் கண்களாக விளங்கும் கல்வி ,சுகாதாரம் ஆகிய இரண்டினையும் பல்வேறுவிதமான கட்டமைப்புக்களோடு பேணிக்காதுவரும் முதல்வர் திராவிட நாயகர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதல்களோடு திருவாரூர் அருகே உள்ள அடியக்கமங்கலம் அரசு மேல்நிலைப்பள்ளிக்கு 42.72லட்சம் மற்றும் புதூர் அரசு மேல்நிலைப்பள்ளிக்கு21.36லட்சம் மதிப்பீடுகளில் புதிய கூடுதல்வகுப்பறைகளை காணொளி வாயிலாக தமிழ்நாடு முதல்வர் திராவிட நாயகர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்துவைத்தார்.

திறப்புவிழாவுக்கு பின்னர் நடைபெற்ற நிகழ்வில் வகுப்பறையில் சட்டமன்ற உறுப்பினர் பூண்டி.கே. கலைவாணன் பள்ளி மாணவ மாணவிகளுடன் குத்துவிளக்கேற்றினார். இந்த நிகழ்வில் மாவட்ட ஆட்சியர் மோகனசந்திரன் , ஒன்றிய செயலாளர் புலிவலம் ஏ.தேவா, முதன்மை கல்வி அலுவலர் சௌந்தர ராஜன் , தலைமை ஆசிரியர் சுமதி, உதவி தலைமை ஆசிரியர் சுதர்சன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

பின்னர் திருவாரூர் நியூ பாரத் பதின்ம மேனிலைப் பள்ளியில் மாவட்ட் நிர்வாகம், மாவட்ட் வேலை வாய்ப்பு மற்றும் தொழில் நெறி வழிகாட்டும் மையம், தமிழ் நாடு ஊராக நகர்புற வாழ்வாதார இயக்கம் சார்பில் நடைபெற்ற வேலை வாய்ப்பு முகாமில் பங்கேற்ற சட்டமன்ற உறுப்பினர் பூண்டி கே.கலைவாணன் நேர்முக தேர்வில் தேர்வானவர்களுக்கு நியமன கடிதங்களை வழங்கி வாழ்த்தினார். 1658பேர் மற்றும் 106 தனியார் நிறுவனங்கள் பங்கேற்ற இந்த வேலைவாய்ப்பு முகாமில் அனைவருக்கும் மாவட்ட செயலாளர் பூண்டி கே. கலைவாணன் அவர்களின் சார்பில் மதிய உணவு வழங்கப்பட்டது.

இந்த நிகழ்வில் பூண்டி. கே.கலைவாணன் எம்.எல்.ஏ.,மாவட்ட ஆட்சியர் மோகனசந்திரன், ஒன்றிய செயலாளர் புலிவலம் ஏ.தேவா, நகர்மன்ற தலைவர் புவனப்ரியா, நகர்மன்ற துணைத்தலைவர் அகிலா சந்திர சேகர், பள்ளி நிர்வாகி முரளிதரன் மற்றும் அரசுத்துறை அதிகாரிகள் பங்கேற்றனர்.



தமிழ்மொழி மீது தாக்குதல் நடத்த மும்மொழிக்கொள்கை கொண்டுவரும் மோடி அரசை கண்டித்து, மன்னை கிழக்கு ஒன்றியம் அரிச்சந்திரபுரம் ஊராட்சியில் அனைத்து வீட்டு வாசல்களிலும் இந்தி எதிர்ப்பு கோலமிட்டு மோடி அரசிற்கு எதிர்ப்பு தெரிவித்தனர். கோலங்களை ஒன்றியச் செயலாளர் ஐ.வி.குமரேசன் ,தலைமை செயற்குழு உறுப்பினர் செல்வம் உள்ளிட்டோர் பார்வையிட்டனர்.






ஈரோடு மத்திய மாவட்ட கழக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் பெருந்துறையில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில் மாவட்ட கழக துணை செயலாளர் அறிவானந்தம் தலைமையில் மாவட்ட கழக பொறுப்பாளர் தோப்பு என்.டி.வெங்கடாசலம் கலந்துகொண்டு வருகிற மார்ச் 1ஆம் தேதி தமிழ்நாடு முதலமைச்சரும், கழகத் தலைவருமான தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை இளைஞர் எழுச்சி நாளாகவும், கிராமங்கள் தோறும் கழகக் கொடியேற்றி, நல உதவிகள் வழங்கி சிறப்பாக கொண்டாடுவதெனவும், வருகிற பொதுத் தேர்தலில் கழக நிர்வாகிகள் சிறப்பாக தேர்தல் களப்பணிகள் ஆற்றுவது குறித்தும் ஆலோசனை வழங்கி சிறப்புரையாற்றினார். கூட்டத்தில் மாநில, மாவட்ட, நகர, ஒன்றிய, பேரூர், ஊராட்சி கழக நிர்வாகிகள், அனைத்து சார்பு அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.